**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.177/205**

**நாள் : 15.04.2026**

**ம.சா.** 2 திரு.குமரேசன்

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**:

நான் லட்சுமணபுதூர் கிராமம், வேட்டப்பட்டு பகுதியில் குடியிருந்து வருகிறேன். எனது ஆதார் அடையாள அட்டையை கொண்டு வந்துள்ளேன். சாட்சி தனது ஆதார் அடையாள அட்டையை முன்னிலைப்படுத்துகிறார். அதன் நகல் **எ.ம.சா.ஆ.**1ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு நீதிமன்றததிலிருந்து அழைப்பாணை வரவில்லை. மனுதாரர்கள் அழைத்ததன்பேரில் சாட்சியமளிக்க வந்தேன் என்றால் சரிதான். நான் பி.இ. படித்துள்ளேன். என்னை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு இந்திராணி அழைத்து சென்றார். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் நான் வழக்கறிஞரிடம் சொன்ன சங்கதிகளின் அடிப்படையில் தட்டச்சு செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விபத்தில் 2 வாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு வாகனங்களும் எதிரெதிர் திசையில் வந்தது என்றால் சரிதான். நான் விபத்து சமயத்தில் சம்பவ இடத்தில் இருந்ததற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் வீட்டுக்கும் ஒட்டும் டைல்ஸ் வாங்குவதற்கு சென்றபோதுதான் சம்பவத்தை பார்த்ததாக சாட்சி கூறுகிறார். நான் பில்டிங் காண்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன். என்னிடம் சால்வன்சி உள்ளது. சாட்சியிடம் சிரியல் நம்பர் கேட்டபோது அது தனது பெயரில் இல்லை என்று கூறுகிறார். நான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்ததற்கு பின்னிட்டு சாட்சி கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை. விபத்து சம்பந்தமாக நான் எழுத்துமூலமாக புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறிய நிலையில் விபத்தை செல்போனில் போட்டோ எடுத்தேனா என்றால் இல்லை.

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையில் விபத்தை நேரில் பார்த்திருந்தால் போட்டோவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் ஊரிலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் டைல்ஸ் வாங்க செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கடையில் வேலையே பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தானது தார் ரோட்டில் நடந்தது. தார் ரோடு சமமாக இருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் தார் ரோடு இல்லை என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் விபத்து நாளில் தார் ரோடு போட்டுக் கொண்டிருந்ததாக சாட்சி கூறுகிறார். அதாவது தார் ரோட்டின் ஒரு பகுதியில் வேலை நடந்துகொண்டிருந்ததாகவும், மறு பகுதியில் வாகனங்கள் சென்றுகொண்டிருந்ததாகவும் சாட்சி கூறுகிறார். அன்றையதினம் நான்கு வழிச்சாலை அமைக்கவேண்டி சாலையின் இருபுறமும் பள்ளம் தோண்டப்பட்டு மண் குவிக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரியல்ல. ஒரு பகுதியில் மட்டுமே வேலை நடந்துகொண்டிருந்தது என்று சாட்சி கூறுகிறார். அவ்வாறெனில் சாலையில் ஒருவழி மட்டுமே இருந்தது என்றால் சரியல்ல. நான்கு வழிச்சாலையாக வேலைகள் நடந்து வந்த நிலையில் ஒருபுறமுள்ள இருவழிச்சாலையை அடைத்துவிட்டு மறுபுறமுள்ள இருவழிச்சாலையில் இருபக்கத்திலும் வாகனங்கள் சென்றுவந்ததாக சாட்சி கூறுகிறார். விபத்து நடந்தபோது காலை 11-11.15 மணி இருக்கும். போலீசார் வந்தபோது மணி 11.30க்கு மேல் இருக்கும். நான் விபத்து சமயத்தில் சம்பவ இடத்திலேயே இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் மழை பெய்ததா என்றால் சரிவர ஞாபகமில்லை. விபத்து சமயத்தில் சம்பந்தப்பட்ட சாலையானது சேரும், சகதியுமாக குண்டும் குழியுமாக இருபக்கத்திலும் மண் கொட்டப்பட்டிருந்ததாக பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரோடு லெவலாகத்தான் இருந்ததாக சாட்சி கூறுகிறார். விபத்து சமயத்தில் சாலைப்பணிகள் நடந்துகொண்டிருந்ததால் இருபுறத்திலும் வந்த வாகனங்கள் வேகமாக செல்ல வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல.

இருசக்கர வாகனமும் எதிரெதிர் திசையில் வந்ததால் ஒருவருக்கொருவர் நேருக்கு நேர் பார்த்துக்கொள்ளமுடியும் என்றால் சரிதான். அத்தகைய சூழலில் விபத்தில் இறந்தவர் லாரி வருவதை கவனித்த நிலையில் லாரியை கடந்து செல்லும்போது இருசக்கர வாகனமானது லாரியின் பின்சக்கரத்தில் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் இருசக்கர வாகன ஓட்டியின் அஜாக்கிரதைததான் காரணம் என்றால் சரியல்ல. அதேபோல் எதிர்திசையில் வந்த லாரி ஓட்டுநரின் அஜாக்கிரதையும்தான் காரணம் என்று சொன்னால் முழுக்க, முழுக்க லாரி ஓட்டுநரின் அஜாக்கிரதைதான் காரணம் என்று சாட்சி கூறுகிறார். நான் விபத்தில் இறந்துபோனவர் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகன ஓட்டுநருக்கு பின்புறத்தில் சென்றேன் என்று சாட்சி கூறுகிறார். அதாவது இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றவர் மெதுவாக சென்ற நிலையில் லாரியானது இருசக்கர வாகனம் வருவதை கவனிக்காமல் இருசக்கர வாகனம் சென்ற பகுதி வழியாக வந்து இருசக்கர வாகனத்தின் பக்கவாட்டில் மோதியதில் இருசக்கர வாகனத்தில் பயணித்தவர் கீழே விழுந்துவிட்டதாகவும், அப்போதுதான் விபத்தில் இறந்தவர் லாரியின் முன்சக்கரத்தில் மாட்டிக்கொண்டதாகவும் சாட்சி கூறுகிறார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் கையிருப்பு சாட்சி என்றால் சரியல்ல. நான் விபத்து பற்றிய விவரங்களை சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியத்திற்கும் போலீசார் தாக்கல் செய்துள்ள அறிக்கைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இரு வாகன ஓட்டிகளின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்ட நிலையில் அதனை மறைக்கவேண்டி மனுதாரர் தரப்பில் தயாரிக்கப்பட்ட சாட்சிதான் நான் என்று சொன்னால் சரியல்ல.

இந்த விபத்தானது 2 பேருந்துகள் மோதிக்கொண்டதால் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் பயணித்த தனியார் பேருந்துதான் அரசு பேருந்தின்மீது மோதியது என்று சொன்னால் சரியல்ல. அரசு பேருந்துதான் தனியார் பேருந்தின்மீது மோதியதாக சாட்சி கூறுகிறார். விபத்தில் அரசு பேருந்தின் ஓட்டுநரும், மற்றும் அதில் பயணித்த 3 பேர் இறந்துவிட்டார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த வகையில் தனியார் பேருந்து ஓட்டுநரின் கவனக்குறைவால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் கிராபிக் டிசைனராக சைன் இந்தியா நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.50,000/- சம்பாதித்ததை காட்டும் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் தனியார் பேருந்தில் விபத்து சமயத்தில் பயணித்ததற்கான டிக்கெட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.5 ரசீதுகளானது வழக்கிற்காகவேண்டி தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் ஊட்டச்சத்து செலவிற்காக ரூ.25,000/- மும், வருமான இழப்பிற்காக ரூ.1,00,000/- மும், போக்குவரத்து செலவிற்காக ரூ.20,000/-மும் செலவழித்ததாக கூறியுள்ள நிலையில் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள தொகை மிகைப்படியானது என்று சொன்னால் சரியல்ல. இரு பேருந்துகள் ஒன்றுக்கொன்று மோதிக்கொண்ட நிலையில் நான் பயணித்த பேருந்தின் உரிமையாளரையும், காப்பீட்டாளரையும் தரப்பினர்களாக கட்சி சேர்த்திருக்கவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. அவ்வாறு கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் பயணித்த தனியார் பேருந்துதான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் செயல்பட்டு எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அரசு பேருந்தின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

**எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.**

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.